2002 ஏப்ரல் 24]

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூரைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூரைச் சுற்றுலா மையமாக ஆக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெலுங்கு-கங்கை திட்டத்தைப் பற்றி நான் ஏற்கெனவே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், என் அறைக்கு வாருங்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து உங்களிடம் கொடுத்திருக்கிறேன். அதுசம்பந்தமாக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று நடந்த சம்பவம்; அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது; மிக விரைவில் எடுத்துக்கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.